## மே – 08 – செவ்வாய்

### புனித குயின்டின்

**“அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகில் கொண்டுள்ள கருத்துக்களை தவறானவை என எடுத்துக்காட்டுவார்” (யோவா.16:8)**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 22 – 34

அக்காலத்தில் உடனே மக்கள் திரண்டெழுந்து அவர்களைத் தாக்கினார்கள். நடுவர்கள் அவர்களுடைய மேலுடைகளைக் கிழித்து அவர்களைத் தடியால் அடிக்க ஆணையிட்டார்கள். அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளிக்கருத்தாய்க் காவல் செய்யுமாறுசிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு கட்டளை பெற்ற அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தார். நள்ளிரவில் பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினார். மற்ற கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திடீரென ஒருபெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறந்தன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன. சிறைக் காவலர் விழித்தெழுந்து, சிறைக்கூடத்தின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு, கைதிகள் தப்பி ஓடியிருப்பார்கள் என எண்ணி, வாளை உருவித் தற்கொலைசெய்துகொள்ள முயன்றார். பவுல் உரத்த குரலில் அவரைக் கூப்பிட்டு, ”நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்து கொள்ளாதீர் நாங்கள் அனைவரும் இங்கேதான் இருக்கிறோம்” என்றார். சிறைக் காவலர் உடனே ஒரு விளக்கைக் கொண்டுவரச் சொல்லி, விரைந்தோடி வந்து நடுங்கியவாறே பவுல், சீலா ஆகியோரின் காலில் விழுந்தார். அவர்களை வெளியே அழைத்து வந்து, ”பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டார். அதற்க அவர்கள், ”ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்” என்றார்கள். பின்பு அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை அவருக்கும் அவர் வீட்டில் இருந்தோர் அனைவருக்கும் அறிவித்தார்கள். அவ்விரவு நேரத்திலேயே அவர் அவர்களைக் கூட்டிச்சென்று அவர்களின் காயங்களைக் கழுவினார். பின்பு அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச்சென்று உணவு பரிமாறினார். கடவுள்மீது நம்பிக்கை கொண்டதால் தம்வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர்

### நற்செய்தி : யோவான் 16 : 5 - 11

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது: இப்போது என்னை அனுப்பியவரிடம் போகிறேன் ஆனால் உங்களுள் எவரும் ”நீர் எங்கே போகிறீர்?” என்று என்னிடம் கேட்காமலேயேநான் சொன்னவற்றைக் குறித்து துயரத்தில் மூழ்கியுள்ளீர்கள்.நான் உங்களிடம் சொல்வது உண்மையே. நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன்.அவர் வந்து பாவம், நிதீ, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார்.பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது. ஏனெனில் என்னிடம் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.நீதி பற்றிய அவர்கள் கருத்து தவறானது. நான் தந்தையிடம் செல்கிறேன் நீங்களும் இனி என்னைக் காண மாட்டீர்கள்.தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது. ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான்“ என்றார்.

**தியானம்:** தூய ஆவியின் வழியாக இயேசுவின் பிரசன்னம் இந்த உலகில் தொடர்கின்றது. இயேசுவின் பிரசன்னத்தில் தொடர்ந்து வாழவும், அவர் தருகின்ற மகிழ்ச்சியில் பங்கு கொள்ளவும் நாம் அழைக்கப்படுகின்றோம். உலகினர் கொண்டுள்ள தவறான கருத்துக்களை எடுத்துக்காட்டி பாவம், நீதி, தீர்ப்பு பற்றிய கருத்துக்களை எடுத்துக்காட்டி தூய ஆவியார் தெளிவாக்குவார் என்கின்றார் இயேசு. உலகினர் என்று இயேசு குறிப்பிடுவது கடவுள்மேல் நம்பிக்கை இல்லாமல் உலகின் போக்கில் வாழ்பவர்களைக் குறிக்கின்றது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் பாவம், நீதி, தண்டனை பற்றிய தெளிவான சிந்தனைகளை கொண்டிருக்க மாட்டார்கள். தாம் சொல்வதும், செய்வதுமே சரியானது என்ற நிலையில் வாழ்வார்கள். ஆனால் இறைமகன் இயேசுவில் நம்பிக்கை கொள்வர்கள் தூய ஆவியின் தூண்டுதலால் இந்த அறிவைப் பெறுகிறார்கள். மனித மனங்களை மாற்ற வல்ல தூய ஆவியாரின் செயல்பாட்டையும், வல்லமையையும் இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். அங்கே மனித விருப்பங்களுக்கு மாறான உண்மையான செயலை பவுல், சீலாவின் நிலையில் பார்க்கின்றோம். ஆகவேதான் எவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையிலும் நாம் தூய ஆவியாரின் செயற்பாட்டிற்கு நம் இதயங்களை திறந்து விடுவோமேயானால் எமது வாழ்வில் அமைதியும் அளவிட முடியாத மகிழ்ச்சியையும், நாம் பெற்றுக்கொள்கின்றோம்.